13.06.09

# இந்துசமய அறநிலையத்துறை – சென்னை – 34.

## செய்திக் குறிப்பு

பழைமையும், தொன்மையும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க திருக்கோயில்கள் தான் நம் தமிழக கலாசாரத்தின் கருவூலங்களாகத் திகழ்பவை. இத்திருக்கோயில்களை அதன் சிறப்புகள் மாறாமல் புதுப்பித்து வருங்கால தலைமுறையினருக்கு உரிமையாக்க வேண்டிய இன்றியமையாத கடமை நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. இக்கடமையை ஆற்றுவதற்கு வேண்டிய வசதிகளையும் வாய்ப்புகளையும் இந்து சமய அறநிலையத்துறை மூலம் ஏற்படுத்திடவும், பழைமையான தொன்மையான இத்திருக்கோயில் கலைக்களஞ்சியங்கள் நிதிவசதியின்மையால் பராமரிக்க இயலாமல், பழுதுபட்டு அழிந்துவிடக்கூடாது என்ற கருணையின்பாலும், கடமையின்பாலும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலான இவ்வரசு, சமயநாட்டமிக்கார் பலரையும் திருக்கோயில்களின் வளர்ச்சியில் பங்கேற்கச் செய்யும் உயரிய நோக்கில் திருப்பணி மேற்கொள்ள நிதியுதவி வழங்கும் நன்கொடையாளருக்கு ''திருக்கோயில் புரவலர்'' விருதினை இந்து சமய அறநிலையத்துறை மூலம் வழங்கி கௌரவிக்கும் என்ற உன்னத திட்டத்தினை 2008–09 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிவித்தது.

இத்திட்டத்தின்படி தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 38,000 திருக்கோயில்களில் போதிய நிதிவசதியின்மையால் புதுப்பிக்க இயலாமல் உள்ள பழமையான திருக்கோயில்களை சீரமைத்திட ஏற்படுத்தப்பட்ட ''இந்து சமய அறநிலையத்துறை திருப்பணி நிதிக்கு'' ரூ.5 இலட்சம் நன்கொடையாக வழங்கும் நன்கொடையாளருக்கு ''திருக்கோயில் புரவலர்'' என்ற விருது வழங்கப்படும்.

நன்கொடையாளரின் புகைப்படம் பொருத்தப்பட்ட தங்கநிற அட்டை ஒன்றும் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ள எந்த ஒரு திருக்கோயிலுக்கும் குடும்பத்தினருடன் ( 5 நபர்களுக்கு மேற்படாமல்) சென்று கட்டணம் ஏதுமின்றி சிறப்பு தரிசனம் செய்யலாம்.

இந்த தங்க நிற அட்டை 20 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது.

இப்புரவலர் திட்டம் 15.6.2009 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கே. ஆர் பெரியகருப்பன் அவர்களால் சென்னை அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பாகாம்பாள் திருக்கோயில் திருமண மண்டபத்தில் நடைபெறும் விழாவில் தொடங்கி வைக்கப்படவுள்ளது. திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.5 இலட்சம் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு ''திருக்கோயில் புரவலர்'' விருதும், தங்க நிறத்திலான அட்டையும் வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவில் குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல தேசிக அடிகளார், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.க. முத்துசாமி I.A.S இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு ப.ரா. சம்பத் I.A.S, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இத்திட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று பயன்பெறலாம். திருக்கோயில்களில் திருப்பணி செய்து வரலாற்றில் இடம் பெறலாம்

இத்திட்டம் குறித்து அறிந்து கொள்ள ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை–34, தொலைபேசி எண்.044–28334811 / 12 / 13, திருக்கோயில் செயல் அலுவலர்கள், இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு முழு விவரங்களை அறியலாம்.

இணை ஆணையர் தலைமையிடம்
ஆணையருக்காக